ஏப்ரல் - 2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

# செந்தமிழ்

தொகுதி : 57
பகுதி : 6

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




தமிழக அரசால் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் விழாவில்
இருபெரும் செயலர்கள் மற்றும்
மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலத் தலைவர் பெ. சாலைமுத்து அவர்கள்

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 57 திங்கள் இதழ்

பகுதி : 6 திருவள்ளுவர் ஆண்டு 2044

ஏப்ரல் 2013




| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,**

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வள்ளலார் பாடல்களில் அச்ச மெய்ப்பாடு | இ. வீரசக்திவேல் | 4 |
| எண்சீர் விருத்தம் – கண்கள் | புலவர் சி. பாண்டுரங்கன் | 9 |
| அமிழ்தும் நஞ்சும் | ஆறுவிரல் ஐம்பொறி | 11 |
| மெய்ப்பாடு, திருக்கோவையார், கலிங்கத்துப்பரணி ஓர் பார்வை ! | பா. அங்கயற்கண்ணி | 14 |
| குறுந்தொகையில் அரசர்கள் | திருமதி. பா. ஜெயமேரி | 21 |
| இலக்கியம் காட்டும் விலங்குகள் | புலவர் சி. பாண்டுரங்கன் | 36 |
| கொன்றவனுக்கு நன்றிசெலுத்திய குணக்குன்று ! | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 39 |

# இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம் !

செந்தமிழ் இதழ் வாசகர்களுக்கு விஜய வருட புத்தாண்டு வாழ்த்துக்கள். இம்மாத இதழில் ஐம்பெரும் தமிழறிஞர்களின் கருத்துக் கருவூலங்களோடு இருபெரும் கவிஞர்களின் இனிய கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. முனைவர் பூந்துறையான் அவர்களின் வாசகத்தில் கட்டுரை வெளியிடும் ஆய்வாளர் தம் பெயரோடு அவர்களுடைய அலைபேசி எண்களையும் கொடுத்தால் தொடர்பு கொண்டு மேலும் வளர வாய்ப்பு ஏற்படும் எனக் கேட்டிருந்தார். செயலர் அவர்கள் இனிவரும் இதழ்களில் ஆவண செய்ய அனுமதியளித்துள்ளார் என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கிறேன்.

வள்ளலாரின் உயிரிரக்கமும் அதன் காரணமாக அவருக்குத் தோன்றிய அச்சத்தையும் திரு. வீரசக்திவேல் அவர்கள் தம் கட்டுரையில் காட்டியிருக்கும் விதத்தை படித்து மகிழ்வதோடு ஆறுவிரல் ஐம்பொறி அவர்களின் அமிழ்தும் நஞ்சும் எனும் ஆய்வையும் அறிந்து மகிழலாம்.

திருக்கோவையாரையும் கலிங்கத்துப் பரணியையும் ஒப்பிட்டு அவ்விலக்கியங்களின் மெய்பாடு, தொல்காப்பிய இலக்கண வரம்பில் எவ்வாறு பொருந்துகிறது என அங்கையர்கண்ணி அவர்கள் ஆய்வு செய்திருக்கிறார்.

குறுந்தொகையில் இடம்பெறும் வரலாற்றுச் செய்திகளை திருமதி. ஜெயமேரி அவர்கள் மிகச்சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். வாசகர்களின் பாராட்டுக்களை இம்மாதம் இவர் பெற வாழ்த்துக்கள். மேலும் புலவர் பாண்டுரங்கன் அவர்களின் 'இலக்கியம் காட்டும் விலங்குகளும்', 'மாபெரும் கவிஞர்களின் கவிதைகளும்' வாசகர்களின் கருத்தைக் கவரும் என்பதிலர் ஐயமில்லை.

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# வள்ளலார் பாடல்களில் அச்ச மெய்ப்பாடு

இ. வீரசக்திவேல்
மேலைச்சிவபுரி

## முன்னுரை

வள்ளலாரை சமயம், சமுதாயம் என்ற நிலைகளில் நின்று ஆராய்ந்த அளவிற்கு இலக்கிய நோக்கிலான அணுகுமுறை குறைவு என்றே சொல்ல வேண்டியுள்ளது. பாமரரும் புரிந்துகொள்ளக் கூடிய அளவிற்கு எளிய பதங்கள், இனிய ஓசைநயம், கற்பனை வளம், கருத்துச் செறிவு, யாப்பியல், இலக்கிய உவமைகள், மெய்ப்பாடுகள் முதலியன அவருடையை பாடல்களில் பொதிந்திருப்பதைக் காணமுடிகின்றது. ஓர் இலக்கியப் படைப்பு என்பது படைப்பாளனின் உள்ளுணர்வுகளை, சமுதாயப் போக்கினைப் புறத்தாருக்குப் புலப்படுத்தி நிற்றல் வேண்டும். அந்த வகையில் வள்ளலார் பாடல்களில் காணப்படும் 'அச்ச உணர்வு' அவற்றின் தோற்றக் களங்கள், வள்ளலாரின் மனநிலை, சமுதாயப் போக்கு, புறத்தாருக்குப் புலப்பட்டு நிற்கும் விதம் முதலிய குறித்து கட்டுரை ஆராய்கிறது.

## மெய்ப்பாடு - விளக்கம்

மெய்ப்பாடு குறித்துத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் செய்யுளியல் ஆகிய இயல்களில் மிகவும் விரிவாகவே பேசியுள்ளார். செய்யுளியலில்,

*"உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளான்*

*மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்"* (தொ.பொருள்.செய்யுளியல்)

என்று மெய்ப்பாட்டிற்கு இலக்கணம் வகுப்பர். "மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று" என்று இளம்பூரணர் விளக்கம் தருகின்றார். இதனையே, "மெய்ப்பாடென்பது பொருட்பாடு, அஃதாவது, உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தாருக்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்" என்பர் பேராசிரியர். மேற்கண்ட மெய்ப்பாட்டினைத் தொல்காப்பியர்,

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**

**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**

**அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப"** (தொல்.பொருள். மெய்ப்பாட்டியல்)

என்று எட்டுவகையாகப் பிரித்துக் காட்டி, அவைகளின் தோற்றக்களங்களையும் விளக்கியுள்ளார்.

## வள்ளலாரும் அச்சவுணர்வும்

வள்ளலார் பாடல்களில் அல்லது வள்ளலாரிடத்துக் காணப்படும் அச்சவுணர்வினைப் பார்ப்பதற்கு முன்னர் அவரைப் பற்றி சிறிய அறிமுகம் செய்து கொண்டால், அவர் அச்சம் கொண்டதற்கான காரணங்கள் புலப்படும். "இராமலிங்கம் மெலிந்து குச்சியான தேகம் கொண்டவர், பெரிய சுடர்விடும் இரண்டு கண்கள். அவர் முகத்தில் நிரந்தரமான சோகம்; தலைமுக்காடு முதல் முழங்கால் வரை மறைத்திடும் இரண்டு வெள்ளை ஆடைகள் அணிந்திருப்பர்; பாதங்களில் கட்-சூ அணிந்திருப்பார்; மீசை வைத்திருப்பார்; இறுதிக் காலத்தில் நீண்ட முடிவளர்த்திருந்தார்" என்று வள்ளலாரை அடையாளப்படுத்துபவர் வள்ளலாரின் தலைமை மாணாக்கர் தொழுவூர் வேலாயுத முதலியார்.

வள்ளலார், தனக்கென எதையும் வைத்துக்கொள்ளாதவர், இல்லற வாழ்வில் ஈடுபடாதவர், பற்றற்ற ஞானியர், கிடைத்த பொன், பொருள்களை கிணத்திலும் குளத்திலும் எறிந்தவர். உணவு, உடை, உறையுள் இவைகளைப் பொருட்படுத்தாதவர், ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய்ய நினைத்தவர்; செய்தவர், எப்பொழுதும் அமைதியையே நாடியவர். துறவு என்ற பெயரில் சுகபோகங்களைத் துய்த்துக் கொண்டிருக்கும் இன்றைய துறவிகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டவர் என அவருடைய குணாதிசயங்களை உணரமுடிகின்றது.

இப்படிப்பட்ட மனநிலையை உடைய ஒருவர் ஏன் அச்சப்பட வேண்டும். எதற்காக அச்சப்பட வேண்டும். யாருக்காக அச்சப்பட வேண்டும் என்ற வினாக்கள் எழுவது இயல்புதான். வள்ளலார் அச்சவுணர்வுடன் பாடிய பாடல்களை ஒருசேரத் தொகுத்துப் பார்க்கும் பொழுது மரணபயம், பஞ்சம், பட்டினிச்சாவு, உடற்பிணி, சாதி சமயங்களின் போலித்தனம், கொலை, பலியிடுதல், தீய குணங்கள் முதலியன அவரிடத்து அச்சவுணர்வினை ஆழமாக உண்டாக்கின என்ற முடிவுக்கு வரமுடிகின்றது.

## வள்ளலாரும் மரணபயமும்

மரணம் என்பது இயற்கையின் நியதியாகிய தருணத்தில், மரணபயம் எல்லா உயிர்களுக்கும் இயல்பாகவே வந்துவிடுகிறது. மரணத்தைக் கண்டு அஞ்சாதவர்கள் யாரும் இருக்க முடியாது. "கூற்றம் குதித்தலும் கைகூடும்",

"கூற்றமோ கண்ணோ" (வள்ளுவர்), "காலன் எனை அணுகாமல் உனதிரு காலில் வழிபட அருள்வாயே" (அருணகிரி), "காலா உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன்" ( பாரதி ) என்பன போன்றவைகள் மரண பயத்தின் வெளிப்பாடுகள். இந்நிலையில் தமிழ்ச்சூழலில் மரணம், மரணமிலா வாழ்வு குறித்து வெகுவாகப் பேசியவர் வள்ளலாரே ஆவார். "சினமுடைய கூற்றுவருஞ் செய்தியறி யீரோ", "மரண பயம் தவிராதே வாழ்வதிலென் பயனோ", "மரணமெனும் பெருந்திருட்டுப் பயலே", "சண்டாளக் கூற்றுவரி லென்புகல்வீர்" என்று ஆவேசப்பட்டுக் கூறியிருப்பதெல்லாம் மரணத்தின் மீது வள்ளலாருக்கு இருந்த அச்ச உணர்வே ஆகும்.

அதே வேளையில் சாகாதிருப்பதும் கைகூடும் என்பது வள்ளலாருடைய அசைக்க முடியாத நம்பிக்கை. சாகாத வாழ்வை தான் பெற்றதாக, இறைவன் தனக்கு அளித்ததாகக் குறிப்பிடும் இடங்கள் ஏராளம். சான்றாக,

**"வயத்தொடு சாகா வரமுமென் றனக்கே**
**வழங்கிடப் பெற்றனன் மரண**
**பயத்தை விட்டொழித்தே னெனக்கிது போதும்**
**பண்ணிய தவம்பலித் ததுவே"** (திருவருட்பா)

**"சாகா வரமெனக்கே தந்ததனித் தெய்வம்"** (திருவருட்பா)

என்பர் வள்ளலார். மரண பயத்தைப் போக்கி, மரணமிலா வாழ்வு பெற வள்ளலார் கண்ட நிவாரணி சன்மார்க்கக் கோட்பாடாகும். அதனால் தான், என்மார்க்கம், பிறப்பொழிக்கும் சன்மார்க்கம் என்று குறிப்பிட்டு, சன்மார்க்க நெறியில் மரணமிலா வாழ்வுபெற மக்களை கூவிக்கூவி அழைக்கும் நிலைப்பாட்டையும் வள்ளலாரிடத்துக் காணமுடிகின்றது.

## உயிரிரக்கமும் அச்சவுணர்வும்

பிறர் துன்பத்தில் துடித்துக் கொண்டிருக்க அவரைப் பார்த்து இச்சுக் கொட்டி அவரவர் தலைவிதி என்று சமாதானம் சொல்லிக் கொள்ளும் சூழலில் வள்ளலார் காட்டும் உயிரிரக்கமும் அச்சவுணர்வும் வேறுபட்டதாக அமைகின்றன. வள்ளலாரையும் இரக்கவுணர்வையும் பிறித்தறிய முடியாது என்று தான் குறிப்பிட வேண்டும், இரக்கவுணர்வு தன்னில் இருந்து நீங்குமாகில் உயிர் வாழேன் என்ற உறுதிப்பாடுடைய வள்ளலாரின்

உயிரிரக்கம் சக மனிதர்களையும் தாண்டி செடி, கொடி, பறவை, விலங்கு என அஃறிணை உயிர்களிடத்தும் சென்றது; வாடிய பயிரைக் கண்டு வாடினார்.

பசிக்கொடிமையால் வீடுதோறும் பிச்சை ஏற்று, பசிப்பிணி நீங்காதவர்களையும், உடற்பிணியால் வருந்தி நின்றோர்களையும் கண்டு வள்ளலார் மனமுடைந்து போகிறார். பசி, பிணி குறித்துப் பிறர் சொல்லிய பொழுதே அவருடைய உள்ளம் வேதனை அடைந்ததை,

"பட்டினி யுற்றார் பசித்தனர் களையால்
பரதவிக் கின்றன ரென்றே
ஒட்டிய பிறரால் கேட்ட போதெல்லாம்
உளம்பகீ ரெனநடுக் குற்றேன்" (திருவருட்பா)

என்ற பாடலடிகள் வழியாக உணர்ந்துகொள்ள முடிகின்றது. ஆடு, கோழி, பன்றி இவைகளைப் பலிகொடுக்கும் போது ஏற்பட்ட அச்சத்தால் சிறுதெய்வங்களை, நலிதரு சிறிய தெய்வம், கலியுறு சிறிய வெங்கோயில் என்று வன்மையாகக் கண்டிக்கும் நிலைக்குப் போய்விடுகிறார்.

பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யும் வலை, கண்ணி முதலான கொலைக் கருவிகளைக் கண்டும், கொலைஞர்களைக் கண்டும் பயந்து ஒடுங்கியதை,

துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்
கண்ணினா லையோ பிறவுயிர் பதைக்கக்
கண்ட காலத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையுந் தூண்டிலுங் கண்ணி
வகைகளுங் கண்டபோ தெல்லாம்
எண்ணியென் னுள்ள நடுங்கிய நடுக்கம்
எந்தைநின் றிருவுள மறியும் (திருவருட்பா)

என்று வெளிப்படுத்தியுள்ளார். இந்த இரக்கவுணர்வே கொலைத் தொழில் புரிவோரையும், புலைப்பசிப்பு உடையோரையும் புறவினத்தார் என்று பிரித்தாள்கிறது. பசிப்பிணியும், உடற்பிணியும், புலைப்பசியும், கொலைத் தொழிலும் சமுதாயத்தில் இல்லாது போக இறைவனிடம் முறையிடும் பாங்கினையும் காணமுடிகின்றது.

**வெருளுங் கொடுவெம் புலையும் கொலையும்**
**விடுமா றருள்வா யபயம் மபயம்**
**அருளும் பொருளுந் தெருளுந் தருவாய்**
**அபயம் மபயம் மபயம் மபயம்** (திருவருட்பா)

என்பது வள்ளலாரின் முறையீடு.

## நடைமுறை வாழ்வும் அச்சவுணர்வும்

எப்பொழுதும் தனிமையையும் அமைதியையும் விரும்பிய வள்ளலார் நடைமுறை வாழ்வில் ஐயோ, அம்மா, அப்பா என ஓலக்குரல் கேட்டபொழுது, போர் பற்றிய செய்திகளைக் கேட்டபொழுது, பிறர் உரக்கப் பேசுகையில், ஆடம்பர வாழ்வைக் கண்டவிடத்து, கொடுஞ்சொற்களைக் கேட்டு, புறங்கூறித் திரிபவர்களைப் பார்த்து, புவியமுந்தும் படி நடப்பவர்களைப் பார்த்து, குடிகாரர்களைக் கண்டு என ஒவ்வொரு நொடியும் அஞ்சி அஞ்சி வருத்தம் கொண்டு வாழ்ந்துள்ளார். இது மட்டுமல்லாது தான் கைவீசி நடப்பதற்கும், கால் மேல் கால் வைத்து அமர்வதற்கும், குடை பிடிப்பதற்கும், செருப்பணிவதற்கும், மேனியைக் காட்டுவதற்கும் பயந்தாகக் கூறுகின்றார்.

**கையுற வீசி நடப்பதை நாணிக்**
**கைகளைக் கட்டியே நடந்தேன்**
***மெய்யுறக் காட்ட வெருவிவெண் துகிலால்***
**மெய்எலாம் ஐயகோ மறைத்தேன்** (திருவருட்பா)

என்பது அச்சத்தின் காரணமாக வள்ளலார் வெண்துகிலால் தலைமுதல் கால் வரை அணிந்து கொண்ட மறைப்பைக் காட்டுகிறது.

**முடிவுரை :** உயிரிரக்கமே வள்ளலாரிடத்துத் தோன்றிய அச்சத்திற்கான அடிப்படை காரணமாக அமைகின்றது. அவ்வாறு தோன்றிய அச்ச உணர்வினை, தொல்காப்பியர் சுட்டும் அச்ச மெய்ப்பாட்டிற்கான அணங்கு, விலங்கு, கள்வர், இறை என்ற தோற்றக்களங்களோடு பொருத்திப் பார்க்க முடியும். இழைத்தேன், பதைத்தேன், உளம் நடுக்குற்றேன், வாடினேன் என்ற சொல்லாட்சிகள் வள்ளலாரின் இரக்க மனநிலையைக் காட்டுவதோடு, படிப்போர்களிடத்தும் மனநெகிழ்வினை உண்டாக்கும் பாங்கில் அமைந்துள்ளன.

## எண்சீர் விருத்தம்

# கண்கள்

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

### கண்கள்

மூவேந்தருள் சேரன் மூலம் இமயம்
கொடி பதிப்புச் சீர்கண்டே உள்மகிழ்ந்த வைதாம் !
பெண்ணின்நல் லாள்உருவ கம்எனும்நேர் காவிரி,
நீர்தேக்கி ஐங்கிளையாய்ச் சோழநாட்டில் பாய்ந்தே
ஆயிரத்தின் ஆண்டுகளாய்ச் செந்நெல்லை ஈந்தே
அடர்பச்சைப் பொன்மரக தப்பட்டுப் பயிரைப்
பாயிரமாய் மக்கள்நல் வாழ்வினுக்கே தந்தே
பரவசம்ஈ கல்லணைபார்த் தார்கரிகால் வளவன் ! (1)
பல்லூழி புகழ்மணக்கப் பன்மொழியின் தாயாய்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றி,
எல்லார்க்கும் எல்லாமும் தந்ததமிழ் போற்றிச்
சங்கங்கள் பாண்டிமன்னர் காத்திருக்கப் பார்த்தன !
காந்திமுதல் காமராசர் ஆயிரமா யிரமாம்
கனிந்தமன நாட்டுதொண்டர், கோள்கொண்டே பார்த்தன !
சேந்துநீராய்த் தாகத்தைத் தணிக்கும்கே ணிபோல்,
சீர்வாரித் தந்திடும்நல் நூல்பலரும் படித்தனர் !
அல்பகலாய் நோய்நீக்கி மருந்தளிப்போர் கண்நேர் !
அஆகற்போ ருள்வாசல் பெருவழிதாம் கண்கள் !
கல்லார்க்குப் புண்ணென்றும் கற்றோர்க்கே நற்பொறி
என்றும்சீர் வள்ளுவரின் சான்றிதழ்கள் பெற்றன !
நோட்டங்கள் எல்லாமே நோட்டமல்ல ! மனத்தின்
வாட்டமெல்லாம் தீர்ப்போர்கள் உள்ளதுகண் ணோட்டம் !

ஆட்டங்கள் பாட்டங்கள் அறுபதுநால் நடனம்,
அருங்காட்சி, ஆலயங்கள், நதிகள்காண் களமாம் !
அன்புள்ளோர் கண்களுக்கே உலகெல்லாம் உறவாம் !
அன்பற்றோர் கண்களுக்கோ அனைத்திடமும் தரையாம் !
தன்னெஞ்சின் உள்ளுறைகண் பார்வையே காட்டும் !
நன்னெஞ்சோ, நூலாகும்; இதழ்மணம்தான் கண்கள் !
உலகமொழி தோராயம் ஆறாயி ரமென்பர் !
உள்ளத்தைப் படிக்கக்கண் மொழிஅறுப தாயிரம் !
பலவின்நேர் சுவைகாட்டும், எட்டிநேரும் காட்டும் ;
பண்புள்ள கண்ணெல்லாம் கண்ணோட்டக் கண்ணே !

## வாசகர் வாசகம் 1

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர் அய்யா,

அவர்களுக்கு வணக்கம். சமண நூலான சீவகசிந்தாமணியில் சிவமரபுச் சிந்தனைகளை ஆசிரியர் திருத்தக்கத் தேவர் ஆங்காங்கே தவழவிடத் தவறவில்லை என்பதை திரு. குருசாமி நன்கு படம் பிடித்துக் காட்டியிருந்தார். ஐவகை நிலத்திலும் குரவைக் கூத்து ஆடப் பெற்றுள்ளதை சங்க இலக்கியச் சான்றுகளை முன்னிறுத்தி ஞானேஸ்வரன் நன்கு விளக்கியிருந்தார். உடம்படுமெய்யுடன் உடம்படா வாதத்தை திரு. பன்னீர் செல்வம் மோதவிட்டு அவர் தலையைக் கொடுத்து தலை சுற்றி நின்றதுடன் நம் தலையையும் சுற்ற வைத்து விட்டார். திரு. இராசகுமார் கண்ணதாசனின் திரையிசைப் பாடல் வருணனை உத்திகளை நன்கு விரித்துரைத் திருப்பினும் ஒரு திரைப்படப் பாடலைக் கூட எடுத்தாளாதது மிகக் குறையாகத் தெரிந்தது. ஆசிரியர்கள் இன்றுள்ள கால கட்டத்தில் செயல்படுவதை நாடறியும். நாமும் அறிவோம். இந்நிலையில் நல்லாசிரியர் யார்? என்ற வினா எழுப்பி நன்னூல் சூத்திரங்களைக் கொண்டு விளக்கியிருந்தது நன் சிறப்பு. பாவேந்தரின் குடும்ப விளக்கில் வரும் உவமைகளில் மூன்றை எடுத்து வேழ வேந்தனார் அய்யா அவர்கள் ஆய்ந்தும் அலசியும் சாதிச் சழக்கிலும் பேதமௌடீகத்திலும் மூழ்கிக் கிடப்போருக்கு அரிய பாடம் புகட்டிப் பித்தம் தெளிவித்திருந்தார்.

அன்புடன்,

**புலவர் ந. ஞானசேகரன்**, திருலோக்கி

# அமிழ்தும் நஞ்சும்

ஆறுவிரல் ஐம்பொறி

தமிழுக்கு அமுதென்று பேர் என்றார் புரட்சிக் கவி பாரதிதாசன் அவர்கள். அமுது, அமுதம், அமிர்தம், தமிழ், அம்ருதம் (வடசொல்), நீர், பால், சுவை, உணவு, மழை, சோறு, உப்பு முதலியன ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள். அமிழ்து என்ற சொல்லுக்கு இன்பத்தில் அமிழ்த்துவது என்ற பொருள் கூறுவாருமுளர்.

ழகரம் இல்லாத அமுது, அமுதம், அமிர்தம் முதலிய சொற்களைத் திருவள்ளுவர் பயன்படுத்தவில்லை. ழகரம் உள்ள அமிழ்து என்ற சொல்லையே மூன்று குறட்பாக்களில் பயன்படுத்தியுள்ளார். அம்மூன்று குறட்பாக்களையும் கண்டு மகிழ்வோம்.

1. **அமிழ்தினும்** ஆற்ற இனிதே தம்மக்கள்
   சிறுகை அளாவிய கூழ். - குறள் - 64
2. அங்கணத்துள் உக்க **அமிழ்தற்றால்** தங்கணத்தார்
   அல்லார்முன் கோட்டிக் கொளல் - குறள் - 720
3. ஊறுதோறும் உயிர்தளிர்ப்பத் திண்டற்றால் பேதைக்கு
   **அமிழ்தின்** இயன்றன தோள். - குறள் - 1106

அறத்துப்பாலில் ஓர் அமிழ்து; பொருட்பாலில் ஓர் அமிழ்து; இன்பத்துப் பாலில் ஓர் அமிழ்து என பாலுக்கொரு அமிழ்தை திருவள்ளுவர் அமைத்துள்ளார். இது சிந்திக்கத்தக்கது.

விருந்தோம்பலில் அமிழ்தை சாவா மருந்து என்று ஒரு குறட்பாவில் பொய்யா மொழி புகன்றுள்ளார்.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. குறள் - 62

என்பதே அக்குறட்பா. அமிழ்தமாயினும் தனியே உண்டல் கூடாது. விருந்தோடுதான் உண்ணவேண்டும் என்ற சீரிய கருத்தை இக்குறட்பா சொல்கிறது. இக்குறளின் கருத்தையே புறநானூறு 182ஆம் பாடலும் பகர்கிறது.

அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலமே

என்பதே அப்புறநானூற்றுப்பாடல். மருந்தே ஆயினும் விருந்தோடு உண் என்ற ஔவையாரின் உள்ளத்தை இவ்விரு பாடல்களிளும் கண்டு மகிழ்கிறோம். இவ்விரு பாடல்களிலும் சொற்கள் கூட ஒன்றியிருப்பதை நோக்கி மகிழ்க.

அமிழ்து உயிரை வளர்ப்பது, நஞ்சு உயிரைப் போக்குவது. நஞ்சு, தீமை, ஆலம், விடம் முதலியன ஒரு பொருள் குறித்த பல சொற்கள். நஞ்சு என்ற சொல் அமைந்துள்ள மூன்று குறட்பாக்களைக் கண்டு மகிழ்வோம்.

1. அஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர் - குறள் 926

2. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று - குறள் 1008

3. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் - குறள் 580

பொய்யாமொழி இம்மூன்று குறட்பாக்களையும் பொருட்பாவில் மட்டுமே அமைத்துள்ளார். இஃது உளங்கொளத்தக்கது.

பிறருக்கு நன்மை செய்ய எண்ணுபவர்கள் அந்நன்மை செய்வதற்காக நஞ்சை உண்பதற்கும் ஒப்புக்கொள்வர். இவ்வுயர்ந்த கருத்தைப் பெயக்கண்டும் என்று தொடங்கும் குறட்பா (580) கூறுகிறது. இக்கருத்தையே நற்றிணை 355ஆம் பாடலும் பகர்கிறது.

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்

என்பதே அந்நற்றிணைப் பாடல். தன்னலமற்ற பொது நலத்தை இவ்விரு பாடல்களும் இயம்புவதைக் கண்டு இன்புறுகிறோம். இவ்விரு பாடல்களிலும் சொற்கள் கூட ஒன்றியிருப்பதை நோக்கி மகிழ்க.

தனிப்பாடல் திரட்டில் சொக்கநாதப் புலவரின் பாடல் ஒன்றை ஈண்டு காண்பது நலம் பயக்கும்.

ஆலங் கிடக்கு மனத்தார்க் கொருநன்றி யம்பிலிட்ட
கோலங் கிடக்குங் கண்டாய் குறையாத குணமுடைய
சீலங் கிடக்கு மனத்தார்க் கொருநன்றி செய்யில்வெகு
காலங் கிடக்குங் கண்டாய்.............. (அம்பிலிட்ட நீரில் எழுதப்பட்ட)

நஞ்சு நெஞ்சையுடையவர்க்கு செய்த நன்மை நீரில் எழுதப்பட்ட எழுத்துப் போன்று விரைவில் அழிந்து போகும். நல்லவர்க்குச் செய்த நன்மை நெடுங்காலம் நிலைத்து நிற்கும் என்பதே இப்பாடலின் பொருள். இப்பாடலில் நன்றியறிதல் என்னும் மேலான கருத்தும் நீரில் எழுத்து என்னும் அருமையான உவமையும் ஆலம், கோலம், சீலம், காலம் என்னும் சிறந்த எதுகையும் உள்ளதைக் கண்டு இன்புறலாம்.

உயிரினங்கள் தம் உடலில் எந்தெந்த உறுப்புகளில் நஞ்சைப் பெற்றுள்ளன என்பதை நீதிவெண்பா 18ஆம் பாடல் பகர்வதை ஈண்டுக் காண்பது நலம் பயக்கும்.

ஈக்கு விடந்தலையில் எய்துமிரும் தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே – நோக்கரிய
பைங்கண் அரவுக்குவிடம் பல்லளவே துர்ச்சனர்க்கு
அங்கமுழு தும்விடமே யாம்.

ஈக்கு தலையில் விடம். தேளுக்கு, கொடுக்கில் விடம். பாம்புக்குப் பல்லில் விடம். தீயவர்க்கு உடல் முழுவதும் விடம். இஃது இப்பாடலின் பொருள். உறுப்புகளில் நஞ்சைப் பெற்றுள்ள உயிரினங்களைக் காண்பித்து அவற்றின் அருகே செல்லாதீர் என்று முன்னறிவிப்பு (எச்சரிக்கை) விடுத்திருப்பதை இப்பாடலில் கண்டுப் பயனுறுகிறோம்.

அமிழ்து, நஞ்சு ஆகிய இரண்டு சொற்களைப் பயன்படுத்தி நம் முன்னோர் காலத்தால் அழியாதப் பழமொழி ஒன்றை கூறியிருக்கின்றார்.

'அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தும் நஞ்சாம்.'

என்பதே அப்பழமொழியாம். இவ்விரு சொற்களைப் பயன்படுத்திப் பல அரிய, பெரிய, உரிய கருத்துக்களைப் பல தமிழ் இலக்கியங்கள் கூறியிருக்கின்றன.

'அதனால்தான் தமிழுக்கு அமுதென்று பேர்'

# மெய்ப்பாடு, திருக்கோவையார், கலிங்கத்துப்பரணி ஓர் பார்வை !

பா. அங்கயற்கண்ணி
முனைவர் பட்ட ஆய்வாளர்

## முன்னுரை

சங்க காலம் முதல் தமிழ் இலக்கிய வரலாறு செழுமையான பதிவுகளைப் பெற்றுள்ளன. தொல்காப்பிய பொருளதிகாரத்தின் 9 இயல்களுள் ஆறாவதாக அமைந்திருப்பது மெய்ப்பாட்டியல். சங்க இலக்கியங்கள் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரை எழுந்துள்ள அகம் புறம் சார்ந்த நூல்கள் அனைத்தும் மரபுப்படி மெய்ப்பாட்டுணர்வை வெளிப்படுத்துகின்றன. ஒப்பாய்வுக்கு தெரிவு செய்யப்படும் நூல்கள் இரண்டும் ஒரே துறையைச் சார்ந்தவையாகவும் இருக்கலாம் அல்லது முரணான துறையாகவும் இருக்கலாம். ஆயின், தத்தமக்கு என உள்ள கருத்துக்களை விளக்கும் முறைகளிலும், கலைச்சொற்கள் பயன்பாட்டிலும் பொதுத் தன்மைகளையும், சிறப்புத் தன்மைகளையும் பெற்றிருப்பது இயற்கையே. இவ்முரணான இலக்கிய இலக்கணங்களை ஒப்பிட்டு அதன் வழியாக அந்தந்த நூல்களின் இயல்புத் தன்மையையும், இலக்கிய வரலாற்றில் நிலை பெற்றிருக்கக் கூடிய தன்மையையும் இக்கட்டுரை பதிவு செய்வதாக அமைகிறது. அக இலக்கிய, இலக்கண நூலான திருக்கோவையாரும், புற இலக்கியத்தைச் சார்ந்த கலிங்கத்துப் பரணியும், மெய்ப்பாடு என்ற ஒரே கோணத்தில் பார்க்கப்படுகிறது.

முரண்பட்ட இரண்டு இலக்கியங்களை ( அகம் - புறம் ) ஒப்பிட்டு ஆய்வதே இவ்வாய்வின் நோக்கம்.

## மெய்ப்பாடு

உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிக்கேற்ப உடலில் தோன்றும் வேறுபாடே மெய்ப்பாடு ஆகும்.

தொல்காப்பியர்,

> **நகையே அழுகை இளிவரல் மருட்கை**
> ***அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்***
> **றப்பா லெட்டாம் மெய்ப்பாடென்ப** - தொல். மெய் - 3

என கூறுகிறார்.

மெய்ப்பாடு சான்றோர் சிலரின் கருத்துக்கள் :

- மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று என்பர் இளம்பூரணர். மெய்ப்பாடு என்பதற்கு பொருளின் புறப்பாடு எனப் பொருள் விரித்தலுமுண்டு.
- மெய்பாடென்பது பொருட்பாடு உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்த்தவாறே புறத்தார்க்கும் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல் என்பர் பேராசிரியர்.
- உலகத்தாரது உள்ள நிகழ்ச்சி அவரது உடம்பின்கண் தோன்றும் கண்ணீரரும்பல், மெய் மயிர்சிலிர்த்தல், வியத்தல், நடுக்கம் முதலிய புறக்குறிகளால் காண்போருக்கும் புலனாகும் தன்மை மெய்பாடென்பர் க. வெள்ளை வாரணர்.
- புலன்களும், புலன்களின் வாயிலாக மனத்திற்கும் இன்பம் தருவதைக் குறிக்க முன்னோர் ஒரு சொல்லைத் தேடினர். அதைத் தமிழில் சுவை என்றனர். அதைப் புலப்படுத்தும் போது தொல்காப்பியம் எட்டு வகை மெய்ப்பாடுகள் எனக் கூறுகிறது என்பர் டாக்டர் மு.வ.

எண்வகை மெய்ப்பாடுகளில் நகைச்சுவை, அழுகை, இளிவரல், பெருமிதம் ஆகிய நான்கு வகை மட்டுமே ஒப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## நகை

வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பது முதுமொழி. சிரிப்பு, நோய் வராமல் தடுக்கும் மருந்து. இது,

**எள்ளல் இளமை பேதைமை மடன்என்று**
**உள்ளப்பட்ட நகை நான்கு என்ப** – தொல். மெய். 4

என்ற நால்வகைப் பொருட்களில் வரும்.

திருக்கோவையாரில் இச்சுவையை உணர்த்தும் பாடல்கள் பல உள்ளன. தலைவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக உடல் மெலிந்து கொண்டே வருகிறான். தலைவனின் இந்நிலைக்கு காரணம், சோலையிலே தலைவன் கண்ட தலைவியின் நினைவே, இந்த நிலை தலைவனது பெருந்தகைமைக்கு ஏலாது என எள்ளி நகையாடும் விதத்தில், எள்ளல் சுவையோடு அமைத்து நகை தோன்ற அழகுபடக் கூறியுள்ள பாடல்.

**உளமாம் வகை............ அண்ணல்**
**இரங்கியதே** தி.கோ.பா. 20

கலிங்கத்துப்பரணியில் இடம் பெற்றுள்ள அளவு நகைச்சுவை உணர்ச்சி வேறு இலக்கியங்களில் இடம் பெறவில்லை எனலாம். பேய்களைப் பாடியது, இந்திரசாலம், அவதாரம், கூழ் சமைத்தல் போன்ற பகுதிகளில் உள்ள பாடல்களை நகைப்பை உண்டாக்குகின்றன.

### எள்ளல்

முதுபேயின் மாய வித்தைகளால் ஏமாற்றம் அடைந்து துன்பப்பட்ட பேய்கள் காளிதேவியைப் பார்த்து, இந்த மாய வித்தைகளை நிறுத்தாவிட்டால், இந்த நொடியிலேயே பேய்க் கூட்டங்கள் எல்லாம் அழிந்து ஒழிந்து போகும் என்பதை,

**அக்கணம் ஆளும் அணங்கினை வந்தனை**
**............ எனக் கை விதிர்தலுமே** – க.ப.பா. 174

எனக் கூறுகிறார்.

### பேதைமை

பேய்களின் பிள்ளைகள் மூங்கிலைக் கண்டால் அம்மா எனக் கூறுவதும், பேய்கள் ஒட்டகங்களைக் கண்டால் என் பிள்ளை போல் உள்ளது என்பதும் பேதைமை உணர்வுடன் கூடிய நகை. இதனையே

**அட்டம் இட்ட நெடுங்கழை காணில்.....**
**ஒக்கும் ஒக்கும் என்று ஒக்கலை கொள்வான்** – க.ப.பா. 143

எனக் கூறியுள்ளார்.

### மடன்

**சுற்ற நினைத் துகில் பெற்றனம் !**
**அதுக்கும் எயிற்றினவே !** – க.ப.பா. 171

என்னும் பாடலில் பேய்களின் மடன் கண்டு நகை ஏற்படுகிறது. முதுபேய்கள் காட்டிய இந்திர சாலத்தில் தோன்றிய இறைச்சியை, உண்மையான இறைச்சி என்றும், உடம்பில் சுற்றிக் கொள்ள கொழுப்புத் துணி கிடைக்கப் பெற்றோம் என்று வெறுங்கையையே துணியாக உடுத்திக் கொள்வதும் நகைப்பை உண்டாக்குகின்றன.

## அழுகை

நகைக்கு நேர் எதிர்மறையான மெய்ப்பாடு அழுகை.

**இளிவே இழவே அசைவே வறுமை என**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே** - தொல். மெய். 5

இது இளிவு, இழவு, அசைவு, வறுமை ஆகிய காரணங்களால் பிறக்கும். இவ்வழுகை தன்மாட்டும் பிறர் மாட்டும் நிகழும் நிகழ்ச்சியைப் பொறுத்தும் அமையும்.

திருக்கோவையாரில், ஒரு காலத்தும் கலங்காத தலைவன், தலைவியின் பொருட்டு தன் நிலையில் தாழ்ந்து தன் வலி இழந்து உடல் அசைவுற்று கலங்குவதை,

**தலைப்படு சால்பினுக்கு................. மான்விழியால்**
**அழிவுற்று மயங்கினனே** - தி.கோ.பா. 25

என்ற பாடலில் அமைத்துள்ளார்.

போர்க்களத்தில் வீரத்தையும், அச்சத்தையும், பெருமிதத்தையும், உருத்திரச் சுவையையும் வெளிப்படுத்தலாம். ஆனால், ஆசிரியர் இங்கு போரில் இறந்த வீரருடைய மனைவியர் கண்டு அழும்போது இழவு காரணமாக வரும் அழுகைச் சுவையை,

**தம் கணவருடன் தாமும் போக......**
**கேட்போரைக் காண்மின் காண்மின்** - க.ப.பா. 482

என்ற பாடல் உணர்த்துகிறது.

## இளிவு

காளிதேவியிடம், முதற்குலோத்துங்கனால் காப்பாற்றப்படுகின்ற பூதங்களாகப் பிறக்காமல், பேய்களாகப் பிறந்தோம் என்று இளிவு காரணமாகத் தோன்றும் அழுகையை,

**ஆறுருடைய திருமுடியான்.........**
**பேய்களாகப் பிறந்து கெட்டோம்** - க.ப.பா. 213

என்ற பாடல் மூலம் அறியலாம்.

## வறுமை

வறுமையின் காரணமாக பசித்தீ தங்களை வாட்டுவதை குறித்து

பேய்கள் வறுமையால் அழுவதை,

**வேகைக்கு விறகு ஆனோம்...........**
**சாக்காடும் அரிதாகத் தந்து வைத்தாய்** க.ப.பா. 216

என்ற பாடல் உணர்த்துகின்றது.

## இளிவரல்

இது மானம் குன்ற வரும் தாழ்வு ஆகும்.

**மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே** – தொல்.மெய். 6

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என நான்கு பொருட்களில் வரும்.

அமிர்தமும், மழையும், தங்குணம் கெடினும், தன்குணம் கெடாத தலைவன், ஒருத்தி காரணமாகத் தன் நற்பண்புகளை நினையாது, தான் செய்த நல்வினை தனக்கு தக்க தருணத்தில் பயன் தரவில்லையென தன் நிலையை நினைத்து வருந்தும் நிலையில் தோழனும் அவனோடு சேர்ந்து தன் நிலையை நினைத்து நொந்து வருந்துவதை,

**ஆலத்தினால் அமிர்தாக்கிய........**
**சீலத்தையும் நீயும் நினையாது**
**ஒழிவது என் தீ வினையே** – தி.கோ.பா. 27

என்னும் வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

## பிணி

இதே சுவையை உணவு இல்லாமல் காய்ந்து போன பேய்களின் முதுகுகள் வற்றல் போன்றும், படகின் மறுபுறம் போலும் காட்சி தருவதாகவும், பாம்புகள் உள்ளே புகுகின்ற அளவில் துவாரத்தைக் கொண்ட குகையைப் போல அந்தக் கொப்பூழ் காணப்பட்டது என்பதை,

**வற்றலாக உலர்ந்த முதுகுகள்.......**
**உடும்பும் உள்புக்கு உறங்கிடும் உந்திய** – க.ப.பா. 140

எனும் பாடல் உணர்த்தும்.

## வருத்தம்

முன்னாளில் செய்த பாவத்தின் பயனாக பிரம்மன் எங்கள் வயிற்றில் பசித்தீயை வைத்து விட்டான் என்று பேய்கள் வருத்தமுற்று அழுவதை

**சாவத்தான் பெறுதுமோ – சதுமுகன்தான்**
**பாவியேம் பசிக்கு ஒன்று இல்லேம் !** – க.ப.பா. 217

இப்பாடலில் காண்கிறோம்.

## பெருமிதம்

இது கல்வி, தறுகண், இசைமை, கொடை ஆகிய பொருட்களில் வரும். இவ்வுலகில் உள்ள மற்ற எவர் ஒருவர்க்கும் ஒப்பாக நில்லாது தனக்கு வரம்பாகிய தலைமையராய் உயர்ந்து நிற்கும் பண்பு பெருமிதம் ஆகும். இச்சுவையானது, தலைவி தங்கள் குலப் பெருமையை தலைவனுக்கு உணர்த்தும் போது, அது பெருமிதச் சுவையோடு அமைகிறது.

**வேய்ந்த வெண் முத்தம்........**

**காவலித்தாழ் வரையே........** – தி.கோ.பா. 130

என்ற வரிகள் காட்டுகின்றன. கலிங்கத்துப் பரணியில் பெருமிதச் சுவை அதிகமாகக் காணப்படுகிறது.

## கல்வி

முதல் குலோத்துங்கள், உலகத்து அரசர் எவரும் இவனுக்கு ஒப்பில்லை என்று கூறும் அளவில் கல்வி கேள்விகளால் சிறந்திருந்தமை.

**போதம் கொள் மாண் வருவாய்புவி இரந்த....**
**வேதங்கள் நான்கினையும் வேதியர்பால்**
**கேட்டருளி மீண்டும் கற்றே** – க.ப.பா. 244

**உரைசெய் பல கல்விகளின் உரிமைபல...**
**நல்கு கலை அவைஅவை பயின்ற பிறகே** – க.ப.பா. 249

என்ற பாடல்கள் உணர்த்தும்.

## தறுகண்

கொப்பம் என்னும் ஊரில் அண்ணனான இராசாதிராசனும்,

இராசேந்திர தேவனும் மேலைச் சாளுக்கியனான ஆகவமல்லனுடன் கடும்போர் புரிந்தனர். அதில் இராசாதிராசன் இறந்துட்டான். அப்போது இராசேநதிரதேவன் ஒப்பற்ற யானையின் மேல் ஏறிவரும் மற்றொரு யானைப் போல் வந்து, அஞ்சாதீர் எனப் படைத் தலைவர்களை ஊக்கினான். இறுதியில் வெற்றியும் அடைந்தான் என்பதை,

> **ஒரு களிற்றின்மேல் வரு களிற்றை ஏத்து.....**
> **புவி கவிப்பதோர் குடை கவித்ததும்** – க.ப.பா. 205

என்ற பாடல் பெருமிதச் சுவையை உணர்த்தும்.

## கொடை

பெருமிதச் சுவைகளில் ஒன்றான கொடை என்னும் சுவையை, பரணியில்,

> **அகைதானம் பறைவாணர் பலர்நின்று பெறவே,**
> **அபயதானம் அபயம்புகுந்தும் மன்னர் பெறவே**
> **கனகதானம் முறைநின்று கவிவாணர் பெறவே**
> **கரடதானம் மத வாரணமும் அன்று பெறவே**

என்னும் பாடல் வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

## முடிவுரை

தொல்காப்பியனார் வகுத்துரைத்தள்ள மெய்ப்பாட்டியல் இலக்கணத்திற்கு எண்குணத்தோனாகிய இறைவனை ஆன்மா சென்றடையும் பொருட்டு, எண்வகை மெய்ப்பாடுகளின் சுவை ததும்பி நிற்கும் ஞானப் பாடல்களை அகத்திணையிலும், புறத்திணையில் கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டார், காப்பியர் வகுத்துள்ள எண்வகைச் சுவைகளையும் பரவலாகத் தந்துள்ளார். கலிங்கத்துப்பரணி வீர இலக்கியம் என்பதால் பெருமிதச் சுவை அதிக இடம் பெற்றுள்ளது.

மெய்ப்பாட்டின் சுவைகளை இருவேறு பொருளில் ( அகம் – புறம் ) அமைந்த திருக்கோவையாரிலும், கலிங்கத்துப் பரணியிலும் பொருத்திப் பார்க்கும் போது, தொல்காப்பியரையும், திருவாதவூரடிகளையும், செயங்கொண்டாரையும் ஒரு சேர அனுபவித்த உவகைப் பெருக்குடன் இக்கட்டுரை முடிவு பெறுகிறது.

# குறுந்தொகையில் அரசர்கள்

திருமதி. பா. ஜெயமேரி
சிதம்பரம்

சங்க காலத்தில் தோன்றிய இலக்கிய நூல்களை அக இலக்கியங்கள், புற இலக்கியங்கள் என இரு வகைப்படுத்துவர். அகப்பொருள் பற்றிப் பாடுவன அக இலக்கியங்கள். புறப்பொருள் பற்றிப் பாடுவன புற இலக்கியங்கள். எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற நூல்கள் புறச் செய்திகள் பற்றிய புறநூல்களாகும். குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு போன்ற நூல்கள் அகச் செய்திகள் பற்றிய அக நூல்களாகும். இவ்வக நூல்களிலும் வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன.

எக்கவிஞனாயினும் தான் வாழும் சுற்றுப்புறச் சூழ்நிலையினையும், சமுதாயச் சிறப்பினையும் மறந்து கவிதை படைத்தல் இயலாது. இதற்குச் சங்க காலக் கவிஞர்கள் விதிவிலக்கல்லர். அவர்கள் இன்பத்தினைப் பாடுபொருளாகக் கொண்டாலும் தம் காலத்திய அரசரையும், ஆதரித்த வள்ளல்களையும் தம் பனுவல்களில் இணைத்தே பாடியுள்ளனர். அகநூலாகிய குறுந்தொகை மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், படைத்தலைவர்கள், வேற்று நாட்டவர் போன்றோரின் வரலாற்று நிகழ்வுகளை எடுத்து இயம்புகின்றது. இத்தகைய வரலாறு நிகழ்வுகளை இக்கட்டுரை எடுத்து இயம்புகின்றது.

## அகப்பாக்களில் புறச் செய்திகள்

அறம், பொருள், இன்பம் மூன்றும் வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதன. இன்பம் பாடுதலே நோக்கமாகக் கொண்ட அகப்பாக்களில் அறமும், பொருளும் இடம் பெற்றிருந்தன. இதனையே தொல்காப்பியர்,

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை**

எனக் குறிப்பிடுகிறார்.

சங்கப் பாடல்களுக்கு வீரம், கொடை, காதல், ஆகியன உயிரோட்டமாக விளங்கின. பரணர், கபிலர், ஔவையார் போன்ற புலவர்கள் உவமை வாயிலாக வரலாற்று நிகழ்ச்சிகளை அகப்பாடல்களில் வெளிப்படுத்துகின்றனர். இவ்வரலாற்று நிகழ்ச்சிகள் சில. அரசர்களின் போர் பற்றியும், சில தலைவர்களின் வீரம் பற்றியும், சில வள்ளல்களின் கொடைச் சிறப்புப் பற்றியும் பகர்கின்றன. சில பாடல்களில் நகரம், மலை ஆகியவற்றின் வரலாற்றுக் குறிப்புகளும் காணப்படுகின்றன. அரசியலில் இடம் பெற்றிருந்த தவறான போக்குகள் கூட அக இலக்கியங்களில் சுட்டப்பட்டுள்ளன. அகப்பொருள் உணர்த்தும் நூலான குறுந்தொகையில் மூவேந்தர்கள், வேளிர்கள், குறுநில மன்னர்கள், நன்னன், படைத் தலைவர்கள், வேற்று நாட்டவர்கள் ஆகியோர் தம் வரலாற்றுச் செய்திகள் காணக் கிடக்கின்றன. இவ்வரலாற்றுச் செய்திகளை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மூவேந்தர்கள்

சேர, சோழ, பாண்டியர் மூவேந்தர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைக் குறுந்தொகை நவில்கிறது. இதில் சேர அரசர்களுள் குட்டுவன் பற்றிய செய்தியும், பாண்டிய அரசர்களுள் பசும்பூட் பாண்டியன் பற்றிய செய்தியும் இடம் பெற்றுள்ளன. சோழ அரசர்களுள் எந்த அரசன் பெயரும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் சோழ அரசின் தலைநகரான் உறையூர் பற்றிய செய்தி காணப்படுகிறது.

## குட்டுவன்

பந்தமிழகத்தின் பன்னிரண்டு பிரிவுகளில் ஒன்று குட்ட நாடு. இது சேர நாட்டின் ஒரு பகுதியாகும். குட்ட நாட்டை ஆண்டதால் இவ்வரசன் குட்டுவன் எனப் பெயர் பெற்றான். இச்சேர அரசன் பெயரைச் சேரமான் குட்டுவன் கோதை எனப் புறநானூறு மொழிகிறது. சேரர்களுள் இரும்பொறை, உதியன் என்ற இரு மரபினர் சங்க இலக்கியங்களில் குறிக்கப் படுகின்றனர். இவருள் குறுந்தொகை சுட்டும் குட்டுவன் செங்குட்டுவனைக் குறிப்பதாகக் கொண்டால், உதியன் மரபினன் எனக் கருதலாம்.

குட்டுவனின் மரந்தை என்னும் நகர் மேலைக் கடற்கரையில் உள்ளது. இதற்கு மாந்தை என வேறுபாடம் உரைப்பாருமுளர். இது கடற்கரைப் பட்டினமாகும். இங்குப் பகைவரைக் கொன்றதால் வீரர்கள் ஏற்படுத்தும்

ஆரவார ஒலி கேட்போரை அச்சுறுத்தும்படி அமைந்துள்ளது என இந்நகரச் சிறப்பினைக் கொல்லிக்கண்ணன் என்ற புலவர் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் மரந்தை நகர் போன்று தலைவியின் நுதல் மிக்க அழகுடையது எனத் தலைவியின் நுதலுக்கு இந்நகரை உவமை கூறுகிறார். இதனை,

**"அட்ட மள்ளர் ஆர்ப்பிசை வெரூஉம்**
**குட்டுவன் மரந்தை யன்னவெம்**
**குழல்விளங் காய்நுதற் கிழவனு மவனே"** (குறு. 34:5-7)

என வரும் பாடலில் காணமுடிகிறது. மரந்தை நகர் இயற்கையழகுடைய சிறந்த நகர் என்பதனை,

**"ஊரோ நன்றுமன் மரந்தை"** (குறு. 166:3)

என்ற பாடலடி சுட்டுகின்றது.

## தொண்டி நகரச் சிறப்பு

சேரர்க்குரிய நகரமாகிய தொண்டி என்னும் கடற்கரைப் பட்டினம் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளதனை,

**திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்துறை** (குறு. 128:2)

என்பர். தொண்டி நகரின் வனப்பினைக் குன்றியனார் தலைவியின் அழகுக்கு உவமை கூறுகிறார்.

தொண்டி அன்னஎன் நலம்தந்து
கொண்டனை சென்மோ மகிழ்நரின் சூளே (குறு. 238:4-5)

இப்பாடற் பகுதியில் தோழி பரத்தை இல்லம் சென்று மீண்டு வந்த தலைவனிடம், தொண்டி நகர் போன்ற சிறப்பின்ன உடைய தலைவியின் நலத்தினைத் தந்து நீ பரத்தைமாட்டு இனிச் செல்லேன் என முன்பு கூறிய சூளினைப் பெற்றுச் செல்வாயாக, எனக் கூறுகிறாள். இதனால் தொண்டி நகரச் சிறப்புப் புலனாகிறது. இத்தொண்டி என்ற பெயரில் மற்றொரு கடற்கரைப் பட்டினம் கீழைக் கடற்கரையில் சோழர்க்குரியதாக அமைந்திருந்தது.

## பசும்பூட் பாண்டியன்

குறுந்தொகையில் பசும்பூட் பாண்டியன் அன்றி வேறு பாண்டிய அரசர்கள் இடம் பெற்றிலர். பசும்பூட் பாண்டியனின் படைத்தலைவன் அதிகன். பசும்பூட் பாண்டியனுக்கும், கொங்கருக்கும் இருந்த தீராப்பகை காரணமாக வாகைப்பறந்தலை என்னுமிடத்தில் போர் நடைபெற்றது. பசும்பூட் பாண்டியன் கொங்கரொடு போர் புரியுமாறு படைத்தலைவன் அதிகனை அனுப்பினான். போரில் கொங்கர் அதிகனைக் களிற்றின் மீதிருந்த வண்ணமே கொன்று வெற்றி ஆரவாரம் செய்தனர். இவ்வெற்றியால் ஏற்பட்ட ஆரவாரத்தினைக் காட்டிலும் தலைவியைப் பற்றி ஊரார் அலர் பேசும் ஒலி மிக்கிருந்தது என்பதைப் பற்றி,

> **கூகைக்கோழி வாகைப் பறந்தலைப்**
> **பசும்பூட் பாண்டியன் வினைவ லதிகன்**
> **களிறொடு பட்ட ஞான்றை**
> **ஒளிறுவாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே** (குறு. 393:3-6)

என உவமை வழி விளக்குகிறார்.

அதிகன் கொங்கரால் கொல்லப்பட்ட பின்னர், பசும்பூட் பாண்டியன் கொங்கரொடு பொருது அவர்களைத் தோல்வியுறச் செய்தான் என்பதைன அகநானூறு அறிவிக்கின்றது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை நக்கீரர் அகநானூற்றிலும், நெடுநல்வாடையிலும் புகழ்ந்து பாடியுள்ளார். இவரே பசும்பூட் பாண்டியன் கொங்கரொடு போர் செய்த வெற்றிச் சிறப்பினையும் கூறியுள்ளதால் பசும்பூட் பாண்டியனே தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பது பொருந்தும்.

## சோழர்

சேர, பாண்டிய அரசர்களின் பெயர் போன்று குறுந்தொகை எந்தவொரு சோழ அரசரின் பெயரையும் உணர்த்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சோழ நாட்டின் தலைநகர் உறையூர். உறையூரில் காவிரியாறு பாய்வதால் செல்வ வளமிக்கிருந்ததை அகநானூற்றுப் பாடல் கூறுகிறது. இவ்வுறையூர் நகர் பற்றிய சிறப்பு, குறுந்தொகையிலும் இடம் பெற்றுள்ளது.

யான்நயந்து உறைவோள் தேம்பாய் கூந்தல்
வளம்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை
நுண்மண லறல்வார்ந் தன்ன (குறு. 116 : 1– 3)

தலைவன் தலைவியின் கூந்தல் சோழரின் தலைநகராகிய உறையூரில் உள்ள காவிரித் துறையில் நீண்டு படிந்திருக்கும் நுண்மையான கருமணல் போன்றது எனக் கூந்தலுக்குக் காவிரித்துறையின் கருமணலை உவமை கூறுகிறான். உறந்தை என்பது சோழ நாட்டின் தலைநகராகிய உறையூரேயாகும். வளங்கெழு சோழர் உறந்தை என இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ளதால் உறையூர் நீர்வளம், நிலவளம் போன்ற பல் வளங்களும் நிறைந்த நகரம் என்பது பெறப்படுகிறது.

## வேளிர்

வேளிர்கள் மலைத் தெய்வமாகிய வேளை ( செவ்வேள் ) வணங்கியதால், வேளிர் எனப்பட்டனர். வேளிருக்கு உரியதாகிய குன்றூருக்குக் கிழக்கில் பெரிய கடல் ஒன்று இருந்தது என்பதனை மாங்குடி மருதன்,

தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்க் குணாது
தன்பெரும் பவ்வம் (குறு. 164 : 3-4)

எனப் பாடியுள்ளார். மாங்குடி மருதன் வேளிரைத் தொன்றுமுதிர் வேளிர் என்பதால் இவர்கள் பண்டைக் காலம் முதல் தமிழகத்தில் இருந்து ஆட்சி செய்த ஒருவகை வேளிர் என்பது தெரிகிறது. இவர்களை மிகப் பழங்காலம் முதல் இந்நாட்டில் இருந்து பழமையுள்ள வேளிர் என்பார் உ.வே. சாமிநாதையர்.

## குறுநில மன்னர்கள்

பண்டைக் காலத்தில் மூவேந்தர்களுக்குட்பட்ட சிறு சிறு பகுதிகளை ஆண்ட சிற்றரசர்கள் குறுநில மன்னர்கள் எனப்பட்டனர். இக் குறுநில மன்னர்களை வீரமிக்கவர்களாகவும், கொடைத்திறன் உடையவர்களாகவும் சங்க இலக்கியங்கள் புகழ்கின்றன. இரப்போர்க்கு ஈயும் அருட் குணம் உடைய சான்றோர்கள் வள்ளல்கள் என அழைக்கப்பட்டனர். சங்க காலத்தில் சிறந்த வள்ளல்களாய்த் திகழ்ந்த எழுவரைக் கடையேழு வள்ளல்கள் என்றனர்

பழந்தமிழர். குறுந்தொகை பேகனைத் தவிர வள்ளல்களாகிய பாரி, அதியமான் நெடுமான் அஞ்சி, மலையமான் திருமுடிக்காரி, ஓரி, ஆய் அண்டிரன், நள்ளி ஆகிய அறுவரைப் பற்றிய குறிப்புகளைத் தருகிறது. இவர்கள் சிறந்த குறுநில மன்னர்களாகத் திகழ்ந்தனர்.

## பாரி

பறம்புமலை பாரிக்குரியது. அம்மலை நல்ல வளமுடையதாகத் திகழ்ந்ததை அவனது கொடைச் சிறப்பு உணர்த்தும். பாரியை வேள்பாரி என்று புறநானூறு புகல்கின்றது. பறம்பு மலையின் சுனையில் உள்ள நீர் இனிய சுவையுடையதென்பதை அகநானூற்றுப் பாடல் தீம்பெரும் பைஞ்சுனை எனக் குறிப்பிடுகிறது. தைத் திங்கள் வெயில் காலம். அக்காலத்தில் சுனை நீர் இயல்பாகவே குளிர்ந்திருக்கும். கடுங்கோடையில் தண்ணிய சுனை நீர் அருந்துவோர்க்கு அமுதமாய்த் திகழும். அதனைக் கருத்தில் கொண்டு மிளைக்கந்தன் என்ற புலவர்,

**பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்**
**தைஇத் திங்கட் டண்ணிய** (குறு. 196 : 3- 4)

என எடுத்துக் காட்டியுள்ளார்.

## அதியமான் நெடுமாறன் அஞ்சி

அதியமான் நெடுமான் அஞ்சி த்கடூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தான். இத்தகடூரே இக்காலத்தில் தருமபுரி என அழைக்கப்படுகிறது. அதியமான் அதியர் என்ற குடியில் பிறந்தவன். இவனுடைய முன்னோர்களாகிய அதியர் சேரநாட்டின் ஒரு பகுதியை ஆண்டனர். இவர்கள் சேரர்களுக்குரிய கண்ணியும், தாரும் கொண்டிருந்தனர். "இவர்கள் தேவர்களைப் போற்றி வழிபட்டு அவர்களுக்கு ஆவுதி அளித்து அவர்கள் நாட்டுக் கரும்பினை விண்ணுலகத்திலிருந்து முதன் முதலில் மண்ணுலகத்திற்குக் கொணர்ந்த பெருமையுடையவர்கள்". இவ்வரலாற்றுச் செய்தியினை ஔவையார் புறநானூற்றில் கூறியுள்ளார்.

அதியமான் நெடுமான் அஞ்சி கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை ஔவையாருக்கு ஈந்து புகழ்பெற்றான். அதியமான் அவையில் ஔவையார் அவைப் புலவராகவும், தூதுவராகவும், அமைச்சராகவும் திகழ்ந்தார்.

ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியின் அஞ்சாது போர் புரியும் ஆற்றலையும், ஓயாது ஈயும் கொடைத்திறனையும் குறுந்தொகைப் பாடலில் சுட்டிக் காட்டினார். அதியமான் நெடுமான் அஞ்சிக்கு எழினி என்ற பெயரும் உண்டு. இவன் தன் நாட்டுப் பசுக்களைப் பகைவர் கொண்டு செல்ல அவர்களொடு பொருதுப் பசுக்களை மீட்டான் என்ற செய்தி அகநானூற்றுப் பாடல்களில் காணக்கிடக்கின்றது. ஔவையார் பகைவருடன் போருக்கு அஞ்சாது நடுநிலையின்றிப் போர் செய்யும் அதியமானின் வீரத்தை,

.............................. வெம்போர்

நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி

முனையான் பெருநின்று (குறுந். 80 : 4-6)

எனப் பாராட்டுகிறார். மேலும்,

ஓவாது ஈயும் மாரி வண்கைக்

கடும்பகட் டியானை நெடுந்தே ரஞ்சி

கொன்முனை யிரவூர் (குறு. 91: 5-7)

என அதியமானின் ஓயாது ஈயும் கொடைச் சிறப்பையும், அவன் போர் செய்த ஊரில் உள்ளவர்கள் அவனுக்கு அஞ்சித் துயிலாமல் இருத்தலையும் விளக்கியிருக்கிறார். இறுதியில் பெருஞ்சேரலிரும் பொறைக்கும் அதியமானுக்கும் தகடூரில் போர் நடைபெற்றது. போரில் அதியமான் இறந்துப்பட்டான். அதியமானின் படைச்சிறப்பினைத் தகடூர் யாத்திரைச் செய்யுட்கள் வலியுறுத்துகின்றன. இவனது மகன் பொகுட்டெழினி என்பான். இவனது சிறப்பு குறித்து ஔவையார் பாடிய பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

## மலையமான் திருமுடிக்காரி

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள் மலையர்கள் அல்லது மலையமான்கள் எனப்பட்டனர். அவர்கள் ஆண்ட நாடு மலாடு என்றும், மலையமானாடு என்றும் பெயர் பெற்றிருந்தது. மலையர்களுள் திருமுடிக்காரி என்ற அரசன் போரிலும், கொடையிலும்

சிறந்தவனாகத் திகழ்ந்தான். தன்னை நாடிவரும் பாணர், புலவர் போன்ற இரவலர்க்குக் களிறும், தேரும் ஈந்து புகழ்பெற்றான். மூவேந்தர் மூவருக்கும் படைத் துணையாகச் செல்லும் பேராற்றல் வாய்ந்தவன். பகைவரைக் கொல்லும் வேற்படை உடையவன். முள்ளூர்க்கானம் என்பதே இவனுக்குரிய காடு. இது சந்தனம் மணக்கும் சிறப்புடையதெனக் கபிலர்,

.................................. அடுபோர்
எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்
தார நாறும் (குறு. 198 : 5-7)

எனவும்,

முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் (குறு. 312 : 2-3)

எனவும் இரு பாடல்கள் வழியாக விளக்குகிறார்.

## ஓரி

ஓரி மாரி போல் வழங்கும் வள்ளன்மை உடையவன். தன் வில்லாற்றலினால் ஏழு விலங்குகளை ஒருசேர வீழ்த்தியதால் வல்வில் ஓரி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான்.

இதனை வன்பரணரின் புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது. ஓரிக்குரியது கொல்லி மலையாகும். இம்மலையின் மேற்குப்புறத்தில் அழகே உருவான கொல்லிப்பாவை ஒன்று உள்ளது. இது கண்டோர் நெஞ்சங் கலங்கிமயங்கி வீழ்ந்து உயிர்விடச் செய்வது. இக்கொல்லிப் பாவையைப் போன்ற அழகுடையவள் தலைவி என்பதனை,

வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் (குறு. 100 : 5-6)

எனக் குறுந்தொகை காட்டுகிறது.. ஓரியின் கானம் நறுமணமிக்க மலர்களால் நிறைந்தது என்பதனை,

.............................................திண்தேர்க்
கைவள் ஓரி கானம் தீண்டி
எறிவளி கமழும் நெறிபடு கூந்தல் (குறு. 199 : 2-4)

எனப் பரணரின் பாடல் கூறுகிறது.

இதன் பின்னர் நடந்த வரலாற்று நிகழ்ச்சியினைப் பரணர் தம் பாடலில் எடுத்துக் கூறியுள்ளார். மலையமான் திருமுடிக்காரி சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை என்பானுக்குத் துணைசென்று வல்வில் ஓரியைக் கொன்று ஓரிக்குரிய கொல்லிமலையைப் பெருஞ்சேரன் இரும்பொறைக்கு வழங்கினான். இச்செய்தியை அகநானூறு நவில்கிறது.

**கொல்லிமலை சேரனுக்கு உரிமையான பின் பரணர்,**
**பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்**
**கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய**
**நல்லியற் பாவை** (குறு. 89 : 4-6)

எனத் தலைவியின் அழகுக்குக் கொல்லிப் பாவையை உவமை கூறுகிறார்.

## ஆய் அண்டிரன்

ஆய் அரசனுக்குரிய நாடு ஆய்குடியாகும். இவ்வரசன் தன்னை நாடி வந்தவர்க்குக் கணக்கின்றி யானைப்பரிசில் அளித்தவன் என்பதும், கொங்கரொடு பொருது அவர்களை மேற்குக் கடற்கரைக் கண் ஓடச் செய்தவன் என்பதும் புறநானூற்றில் அறியத்தகும்.

போதியமலை ஆய் அரசனுக்குரியதாகும். தலைவியின் அழகினை நினைக்கும் செவிலித்தாய் அவள் மேனி ஆய் வள்ளலின் பொதிய மலையில் உள்ள வேங்கை, காந்தள் போன்றவற்றின் மலர்களைப் போல் நறுமணம் வீசும் என்றும், அவள் அங்குள்ள ஆம்பல் மலரைக் காட்டிலும் குளிர்ச்சி உடையவள் என்றும் கூறுகிறாள்.

**கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்**
**வேங்கையும் காந்தளும் நாறி**
**ஆம்பல் மலரினும் தான்தண் ணியளே** (குறு. 84 : 3-5)

என ஆய் அரசனின் பொதியமலைச் சிறப்பினை மோசிகீரன் என்ற புலவர் குறிப்பிட்டுள்ளார்.

## நள்ளி

தோட்டி என்னும் மலைக்குரியவன் நள்ளி. இவனுக்குக் கண்டீர கோப்பெரு நள்ளி எனவும், கண்டீரக்கோ எனவும் வேறு பெயர்கள் உண்டு. இவன் தன்னை நாடிவரும் இரவலர்க்குத் தேரும், யானையும், பொன்னும்,

பொருளும் பரிசாக அளிப்பான். இசை இலக்கணம் முற்றிலும் அறிந்தவன். இவன் இசைத் திறமையை 'வன்பரணர்' பாராட்டிப் பாடியுள்ளார்.

வலிமை மிக்க தேர்ப்படையையுடைய நள்ளியின் காட்டில் பசுக்குள் உண்டாக்கிய நெய்யின் சிறப்பினைக் 'காக்கை பாடினியார் நச்செள்ளையார்' பாடியுள்ளார். (குறு. 210) இவர் விருந்து வரைக் கரைந்த காக்கையைப் பற்றிப் பாடியதால் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.

குறுந்தொகைப் பாடலில் தோழி தலைவன் வருகையை உணர்த்திய காக்கைக்குப் பலியாக,

**திண்தேர் நள்ளி கானத் தண்டர்**
**பல்லா பயந்த நெய்யிற் றொண்டி**
**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ**
**றெழுகலத் தேந்தி** (குறு. 210:1-4)

கொடுத்தல் வேண்டும் என்கிறாள்.

## நன்னன்

நன்னன் ஆற்றல்மிக்க பெரும்படை உடையவன். தன்னைப் பாடிவரும் பாணர் முதலியோர்க்குப் பகைவரை அழித்துப் பெற்ற பொருள்களை வரிசையறியாது வாரி வழங்கும் வள்ளமை உடையவன்.

நன்னனுடைய நாட்டில் ஆற்றங்கரையிலிருந்த தோட்டத்தில் அரிதாக வளர்ந்த மாமரத்தின் இனிய காயொன்று ஆற்றில் மிதந்து வந்தது. நீராட வந்த பெண்ணொருத்தி அக்காய் நன்னனுடையது என அறியாது அதை எடுத்து உண்டனள். அதை அறிந்த நன்னன் அவளுக்குக் கொலைத்தண்டனை விதித்தான். இதுகண்டு அப்பெண்ணின் தந்தை எண்பத்தொரு களிற்றையும், அவளது எடைக்குத்தகப் பொன்னால் செய்த பாவையையும் கொடுப்பதாகக் கூறினான். அதை ஏற்காத நன்னன் அப்பெண்ணைக் கொலை செய்தான். நன்னனின் இழிசெயலான இவ்வரலாற்று நிகழ்ச்சியனைப் பரணர்,

**மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை**
**புனறரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு**
**ஒன்பதிற் றொன்பது களிற்றோ டவணிறை**

பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் (குறு. 292:1-5)

எனக் குறிப்பிட்டுள்ளார். அரசனின் தவற்றினைச் சுட்டிக் காட்டியுள்ள பரணரின் துணிவு பாராட்டுதற்குரியதாகும். நன்னன் இவ் இழிசெயல் காரணமாகச் சங்கப் புலவர்களால் பெண்கொலை புரிந்த நன்னன் என இகழப் பெற்றான்.

## கோசர்கள்

கோசர்கள் சிறந்த போர் வீரர்கள். தாம் கூறிய வஞ்சினத்தைக் கூறியவாறே நிறைவேற்றுவார்கள். இவர்கள் நன்னன் நாட்டின் மீது படையெடுத்து அவனுடைய காவல் மரமாகிய மாமரத்தை வெட்டி வீழ்த்தினார்கள் என்பதை,

............................ நன்னன்
நறுமா கொன்று நாட்டில் போகிய
ஒன்று மொழிக் கோசர் (குறு. 73:2-4)

எனப் பரணர் சுட்டுவர். இவர்களில் நான்கு பிரிவினர் உள்ளனர். இவர்கள் நேர்மை தவறாது நீதி வழங்குவார்கள். பழமையான ஆலமரத்தின் அடியில் பொதுச் சபைக் கூட்டி நீதி உரைப்பார்கள்.

தொல்மூது ஆலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாய்ஆ கின்றே..................... (குறுந். 15:2-4)

என்றும் பாடல் கோசர்களின் நேர்மைச் சிறப்பினை மொழிகிறது.

## படைத்தலைவர்கள்

### அதிகன்

அதிகன் பசும்பூட் பாண்டியனின் படைத்தலைவன். இவன் கொங்கரொடு செய்த போரில் களிற்றொடுப்பட்டான் என்பதனைப் பரணர் குறுந்தொகைப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். ( குறு. 393 ). இவ்வாறு களிற்றொடுபடுதல் களிற்றுடனிலை என்ற துறையைச் சார்ந்ததாகும்.

## அகுதை

மதுரையில வாழ்ந்த வள்ளலாகிய அகுதை என்பான் சிறந்த படைத் தலைவனாவான், இவன் நன்னனின் படைத்தலைவனாகிய மிஞ்லியைத் தோற்கடித்தமையை அகநானூறு அறைகிறது. அகுதை இனிய கள்ளை உடையவன், அகவன் மகளிர்க்குப் பிடிகளைப் பரிசாக அளிப்பவன். இவன் கொடைச் சிறப்பினைப் பரணர்,

இன்கடுங் கள்ளின் அகுதை பின்றை
வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசின் (குறு. 298 : 5-7)

எனக் கூறியுள்ளார்.

## அழிசி

ஆர்க்காட்டை ஆண்டவன் அழிசி என்பான். இவன் யானைப் படைகளையுடைய வீரனாகிய சேந்தன் என்பவனின் தந்தை. அழிசி இனிய கள் உணவினையும், ஒளிபொருந்திய வாளினையும் உடையவன். வீரர்களின் தலைவன். அவனுடைய ஆர்க்காடு என்னும் நகர் போன்ற அழகுடையவள் தலைவி என்று பரணர் தம் பாடலில் குறிப்பிடுகிறார்.

அழிசி ஆர்க்காடு அன்னஇவள் (குறு. 258 : 7)

எனத் தலைவியின் அழகுக்கு ஆர்க்காட்டினை உவமை கூறியுள்ளார்.

## ஆதிஅருமன்

ஆதி அருமன் சிறந்த கொடை வள்ளல். இவனுடைய மூதூரினைப் போன்ற அழகுடையவள் பரத்தை என்பதனை, ஆதி அரமன் மூதூரன்ன ( குறு. 293 : 4) எனத் தலைவி உரைக்கிறாள். இப்பாடலில் கள்ளில் ஆத்திரையனார் குறிப்பிட்டிருக்கும் மூதூரினை நக்கீரரின் நற்றிணைப் பாடல், மூதில் அருமன் பேரிசைச் சிறுகுடி என உரைக்கிறது.

## எவ்வி

வேள் எவ்வி என்றழைக்கப்படும் இவன் மிழலைக் கூற்றத்துத் தலைவன், வேளாளர் பிரிவினைச் சார்ந்தவன். நீழல் என்னும் ஊரை

உடையவன். பாணர்க்குப் பொற்பூ அளித்து அவர்களை ஆதரித்தவன். இவன் இறந்ததும் யாழ்ப்பாணர்கள் மிகவும் வறுமையுற்றனர். இதனைப் பரணர்,

**எவ்வி இழந்த வறுமையாழ்ப் பாணர்**
**பூவில் வறுந்தலை** (குறு. 19:1-2)

என எவ்வியின்றி யாழ்ப்பாணர்களின் தலை பொலிவிழந்ததை குறுந்தொகைப் பாடலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

## விச்சியர் பெருமகன்

பதிற்றுப்பத்திலும், புறநானூற்றிலும் விச்சிக்கோ என்ற வள்ளலைப் பற்றிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதனைக் கொண்டு விச்சிக்கோ, விச்சியர் பெருமகன் இருவரும் ஒருவரே எனவும் மொழிவர். விச்சியர் பெருமகன் போர் செய்வதில் வல்லவன். இவன் குறும்பூர் என்னுமிடத்தில் வேந்தர்களுடன் போர் செய்ததைப் பரணர்,

**வில்கெழு தானை விச்சியர் பெருமகன்**
**வேந்தரொடு பொருத ஞான்றை** (குறு. 328:5-6)

எனக் கூறியுள்ளார்.

## கொங்கர்

கொங்கர் கொங்க நாட்டினை உடையவர்கள். இவர்கள் பசும்பூட் பாண்டியனின் படைத் தலைவனாகிய அதிகனை வென்றமையால் செய்த ஆரவாரத்தினைப் பற்றி தம் பாடலில் கூறியுள்ளார் (குறு. 393)

## பூழியர்

பூழியர்கள் பூழி நாட்டைச் சார்ந்தவர்கள். இவர்கள் ஆதிரைகளையும், ஆடுகளையும் மிகுதியாகக் கொண்டிருந்தனர். செருப்புமலை இவர்களுக்குரிய மலையாகும். இவர்கள் சேரர்களுக்குப் படைத் தலைவராக விளங்கினர். அம்மூவனார் பெரிய நீர்த்துறையில் மீன்களை உண்ணும் பொருட்டு நாரைகள் பரவி இருப்பது பூழியர்களின் வெள்ளாட்டு மந்தைகள் பரவி நிற்பது போன்று உள்ளது என்பதனைப்

**.................................... பூழியர்**
**சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன**

மீனார் குருகின் கானலம் பெருந்துறை (குறு 163 : 1-3)

எனக் குறிப்பிடுகின்றார்.

## தொண்டையர்கள்

தொண்டையர்கள் பகைவர்களுடைய நிலங்களை வென்று அவற்றால் வரும் பயன்களை நுகர்பவர்கள். யானைப் படையையும், தேர்ப் படையையும் உடையவர்கள். இவர்களுக்குரியது வேங்கடமலையாகும். இவர்கள் சிறப்பினைக் கல்லாடனார்,

மண்ணெடுத் துண்ணும் அண்ணல் யானை
வன்தேர்த் தொண்டையர் வரைழையம லடுக்கத்து (குறு 260 : 5-6)

எனப் பாராட்டியுள்ளார்.

## வேற்று நாட்டவர்

சங்க காலத் தமிழர்கள் வாணிகம், பண்பாடு, நாகரிகம் இவை கருதி அயல் நாடுகளுக்குச் செல்வது வழக்கம். ஆதலால் வேற்று நாட்டவர்கள் பற்றிய குறிப்புகள் சங்கப் பாக்களில் இடம் பெறலாயின. குறுந்தொகை, வடுகர், கட்டி, நந்தர் போன்றோர் பற்றிய குறிப்புகளைக் கூறுகிறது.

## வடுகர், கட்டி

வடுகர் வேங்கட மலையில் வடக்குப் பகுதியை ஆண்டதால் வடுகர் எனப்பட்டனர். இவர்கள் மிக்க வீரம். உடையவர்கள்.. இவருள் ஒருசாரார் வேட்டையாடும் தொழிலுடையார். வடுக சாதியினர் இன்றும் காணப்படுகின்றனர்.

கட்டி என்பவன் கங்க நாட்டின் தலைவன். வடுகரின் நாடும், கட்டி என்பவனின் நாடும் வேறுபட்ட மொழிகள் வழங்கும் நாடாகும் என்பதனை மாமூலனார் குறிப்பிட்டுள்ளார்.

குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும் (குறு. 11 : 5-7)

என்பதனால் பழந்தமிழர் வாணிகத்தின் பொருட்டு மொழிபெயர்ந்தே சென்றுள்ளார் என்பது புலனாகிறது.

## நந்தர்

பண்டைத் தமிழ் மக்கள் வடநாட்டில் ஆட்சி செய்த நந்த அரசர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இவ்வேந்தர்களின் தலைநகர் பாடலிபுத்திரமாகும். இந்நகர் பாடலி என வழங்கப்படுதலையும், பொன் மிக உடைய நகர் என்பதனையும் அகநானூற்றுப் பாடல் அறிவிக்கின்றது. இதனைக் குறுந்தொகைப் பாடலும் புலப்படுத்துகிறது. தலைவி தலைவனுடைய வருகையை உணர்த்திய பாணனை,

**வெண்கோட் டியானை சோனை படியும்**
**பொன்மலி பாடலி பெறீஇயர்** (குறு. 75:3-4)

என வாழ்த்துகிறாள். இப்பாடலினால் சங்க காலத் தமிழர் வேறு நாடாக இருப்பினும் அதனைப் பற்றியும் அறிந்திருந்தனர் என்பது தெரிகிறது.

இவ்வாறாக, குறுந்தொகை அகப்பொருள் உணர்த்தும் நூலாயினும் சங்கப் புலவர்கள் இந்த அடி குறைந்த பாடல்களையுடைய குறுந்தொகையில் புறச் செய்திகளையும் இணைத்துப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குறுந்தொகையில் மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், தலைவர்கள், வேற்று நாட்டவர் போன்றோரின் பல்வேறு வரலாற்றுச் செய்திகளும், அவர்தம் தலைநகரங்களும் சங்கப் புலவர்களால் உவமைகளாக்கப்பட்டுள்ளன. இவற்றால் சங்க காலத்தில் நிலவிய பல்வேறு வரலாற்றுச் செய்திகளைத் தெற்றென அறிந்துகொள்ள முடிகிறது. எனவே குறுந்தொகை சிறந்த வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

# இலக்கியம் காட்டும் விலங்குகள்

## (முதல் பாகம்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

தொட்டுப் பார்த்த ஒருவரைக் காட்டு(டு) யானைகள் துவைத்துப் போட்டனவாம். அத்தகைய காட்டு யானைகளைப் பழக்கிக் குழந்தைபோல் பழகவைக்கிற பாகர்தம் திறமையையும், இரவும் பகலும் அதனை விட்டகலாது காக்கும், விலங்கின்பால் உற்ற மீப் பரிவையும், இக்காலத்துக் கணினியான ஊட்டிவைக்கும் சொல்மந்திரம் போல, அக்காலத்து வேற்றுமொழியில் கட்டளை ஊட்டிப் பயிற்றிய திறமையையும் பொறுமையையும் எவ்வளவு மெச்சினாலும் தகும். மக்களிடையே, ஆண்டு விழாவில், மூன்று நிமிடம் நடனமாட, பள்ளிக் குழந்தைக்கு, அதன் தாயும் ஆசிரியையும் முந்நூறு நிமிடம் கூடச் சலிக்காமல் பயிற்சியளிக்கத் தயங்குவதில்லை. நம் மொழியில் நம்மோடு பேசத் தெரியாத யானையைப் பழக்கித் தன் வாழ்நாள் முழுமையும் மக்களிடையே வாழ, யானைக்கு, நுட்பமாகப் பயிற்சி தந்த பாகன், மிகப்பெரிய கலைஞனன்றோ? புலத்தில் பயிலும் மொழியில் கட்டளைச் சொல் அமைத்துப் பயிற்றினால், யானையின் அருகில் செல்லும் இருவர் பேசும் போது, தற்செயலாக அச்சொல் உச்சரிப்பைக் கேட்கும் யானை, செயலைத் தொடங்கிச் செய்யும் இடர் நேர்ந்துவிடாமல் காக்க, அயல்மொழியில் சொல் மந்திரம் அமைத்த பாகர்களின் மதிநுட்பம், அறிவியல் பேரறிஞரின் மதிநுட்பத்தோடு ஒப்பிட்டு வியக்க வைப்பதன்றோ?

கல்தோன்றி மண்தோன்றாத் தொன்மைக் காலத்தே, மாந்தர்க்கு உலர்ந்த விறகைக் கொண்டு வந்து உதவிய முதல் விலங்கு யானை என்பதை எண்ணி, நம் நெஞ்சம் வியப்பால் நிறைகின்றது; அவ்வழக்கம் பூத பாண்டியன் காலத்தும் நிலவியதை, யானை தந்த முளிமர விறகில், கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து.... எனும் (புற. 247) பாடல் வரிகள் உறுதிப் படுத்துகின்றன ; மரங்களைப் பழகிய யானைகளைக் கொண்டு கொணர்விப்பதனை, கழகப் பதிப்பு திரு ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை உறுதிப்படுத்தும். புறநானூறு பாடலகள் 65. யானை பற்றிய குறிப்புகளோடும், 55 பாடல்கள் களிறு பற்றிய குறிப்புகளோடும், ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலமாக விளங்குவதைத் தமிழுலகு நன்கறியும்.

**யானைக்குக் கவளம் கொடுத்தல்**

காய்நெல் கவளம் தீற்றிக் காவுதொறும்

கடுங்கண் யானை காப்பன நன்றி.......... புற. 337

யானையைப் பரிசாய்ப் பெறல் ; யானைக் கவளம் உவமையாதல்

.............இழையணி யானை இயல்தேர் அஞ்சி
அதியமான் பரிசில் பொறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுஅது பொய்யா காதே..... (புற. 101)

கவளம் சிந்தினும் கவலை இல்லை :

வாங்கும் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயருறா............

பரிசளிக்கத் தகுதி உடையது, பழக்கிய யானையே :

குழியில் கொண்ட மராஅ யானை
மொழியின் உணர்த்தும் சிறுவரை அல்லது
வரைநிலை இன்றி இரவலர்க்கு ஈயும்
வள்வாய் அம்பின் கோடைப் பொருநன். (அக. 13)

யானைகளைப் பழக்கும் மொழியில் இவையும் உள :

அது, ஆது ; அப்புது அப்புது ; ஐஐ - சிந்தைக்கு

விருந்தாகும் இவ்வரியைத் தம் அற்புதமான உரையில் முன்வைக்கின்றார் புலவர் திரு. அ. மாணிக்கனார் எம்.ஏ., அவர்கள். வளர் தமிழ் காக்கும் வர்த்தமானன் பதிப்பக அகநானூறு நூல் (1999) வழி : மனதாரப் பாராட்டுவோம் !

வேழம் என்னும் சொல், அகநானூற்றில், ஒன்பது இடங்களில் அமைந்துள்ளது. வேழம், யானை, கரும்பு, மூங்கில், நாணல் எனப் பலபொருள் தரும் ஒரு சொல். இச்சொல் ஏழு இடங்களில், யானை என்னும் பொருளை, அகநானூற்றில் தந்தது ! நூலை மூன்றாகப் பிரித்துப் பெயரிட்ட தமிழ்ச் சான்றோர், 1-120 பாடல் கொண்ட முதல் பகுதிக்கு இட்ட பெயர் : களிற்றியானை நிரை !

யானை போல் ஒலிதரும் பறவை ; குஞ்சரக் குரல் குருகு என, அகம் 145ஆம் பாடலில் குறிக்கப்படுகிறது. இதனை நச்சினார்க்கினியர் வண்டாங்குருகு என்றார்.

குஞ்சரம், அகம் 92ஆம் பாவழி, யானையைக் குறித்தது, வாரணம் ஆயிரம் எனில், யானைகள் ஆயிரம். அகநானூற்றில், வாரணம் என்னும்

சொல், நான்கு பாடல்களில் பயின்று வந்துள்ளது. அக. 172, வாரணம் உரறும்.... எனத் தொடங்கி, யானைகள் பிளிறுகின்ற.... எனப் பொருள் தந்தது; பா. 392, வாரணம் கதற..... என, யானையைக் குறித்தது ; பிற இரண்டில் அச்சொல், காட்டுக் கோழியைக் குறித்ததே.

விடுதலைக் குயில் பாரதியாரின் பரிசு : சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு, சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

பரியது, கூர்ங்கோட்டது என வள்ளுவர் வியந்த யானை, முதுமலை முதலான இடங்களில், நிரம்ப உள ; வலிமை மிக்க உடல் எடை மீஅளவாகத் தோராயம், 4,500 + புதுக்கல், உளதாம்!

மந்தியும் அறியா மரம்பயில் கானகத்தில், யானை விரும்பியுண்ணும் தழைக்கேதும் பஞ்சமில்லை யாதலால், அக்கூட்டத்தின் கொண்டாட்ட வாழ்விற்குக் குறையேதும் இருக்காதெனவே எல்லோரும் நம்பினாலும், அவை எதிர்கொள்ளவும் சில பிரச்சினைகள் இருந்ததை, இலக்கியங்கள் எடுத்துரைத்து, அவற்றின்பால் இரக்கம் கொள்ள வைக்கின்றன.

புலியைக் கண்டு அஞ்சுதல், : (அக. 39)
.............மதர்புலி வெரீஇய மையல் வேழத்து
இனம் தலை மயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு.....

தாக்குபுலிக்கு நடுங்குதல் : (அக. 92)
....குஞ்சரம் நடுங்கத் தாக்கி, கொடுவரிச்
செங்கண் இரும்புலி குழுமும் சாரல்......
வேங்கை மலர் கண்டு, புலியோ என அஞ்சுதல் : (அக. 12)

குறவர், பலாப்பழப் பயன்கொள்ளக் குடிசை அமைத்தனர். அதன் கூரை முற்றிலும் மறையுமாறு, நிரம்ப வேங்கை மலர்கள் உதிர்ந்து பரவியுள்ளன. அத்தோற்றத்தைக் கண்டு யானை அஞ்சி ஓடியது ; அதனால், மூங்கில்கள் முரிந்து வீழ்ந்தன.

"குறவர் ஊன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து, வெரீஇய புகர்முக வேழம்
மழைபடு சிலம்பில் கழைபட பெயரும்......."

– தொடர்ச்சி அடுத்த இதழில்....

# கொன்றவனுக்கு நன்றிகூறிய குணக்குன்று !

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

கருணைஎனும் அரும்பண்பே உருவாய் வந்த
கண்ணியர்தாம் புத்தபிரான்; கோடை தன்னில்
மரம்சூழ்ந்த நிழற்சாலை தவிர்த்து விட்டு,
மாற்றுவழி வெய்யிலிலே நடந்து போவார்!
ஒருசீடர் அதற்குரிய விளக்கம் கேட்டார்;
உத்தமரும் பதில் சொன்னார்; "நிழலில் தங்கி
இருக்கின்ற எறும்பனைய உயிர்கள் எல்லாம்
இறக்காதா நம்முரட்டுப் பாதம் பட்டால் ?"

ஓர்உழவன் கௌதமரை வழியில் கண்டான்;
உறுபசிக்கே உணவளிக்க அழைத்துச் சென்றான்;
சீர்அறிந்த அவன்மனைவி இல்லத் திற்குத்
திடீர்என்றே விருந்தினராய் வந்தோர் எல்லாம்
யார்என்றே அறிந்திட்டாள்; பதற்றத் தோடே
அருகிருந்த காளான்கள் பறித்து வந்து
சீர்உணவைச் சமைத்திட்டாள்; இலையைப் போட்டு
செய்தசுவை உணவுபரி மாறி நின்றாள்.

சமைத்தஅந்த உணவில்கொடும் நச்சுக் காளான்
தவறாக எப்படியோ கலந்த தாலே,
இமைப்போதில் அதைஉண்ட புத்தர் தம்மின்
இதயத்துத் துடிப்படங்கக் கண்ட சீடர்
குமுறிஅந்த உழவனையே தாக்கப் பாய்ந்தார்;
கூடாது எனச்சீடர் தமைத்த டுத்தே,
"எமக்கிங்கே 'மரணஇன்பம்' தனைக்காண பித்த
இனியவர்க்கே நன்றிசொல்வீர் ! " என்றார் புத்தர் !

# வாசகர் வாசகம் (2)

## செந்தமிழை வாழ்த்துவோம்

சீவகசிந் தாமணியில் பெருக்கெடுத்த
சிவமரபுக் கருத்தெல்லாம் உருக்கி வார்த்து
மேவுமுயர் ஐந்நிலத்துக் குரவைக் கூத்தை
மேல்சங்க இலக்கியத்துள் மின்னவைத்து
நாவுரைக்கும் நல்லாசான் பண்புணர்த்தி
நற்கண்ண தாசனுத்தி வருணனைகள்
தூவிப்பா வேந்தருடை உவமை ஆற்றல்
தொகுத்தளித்த செந்தமிழாம் இதழை வாழ்த்து!

**பாவலர் அறிவரசன்**, திருலோக்கி

# வாசகர் வாசகம் (3)

தமிழினிய செந்தமிழ் ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். நலம் வேண்டும்.

செந்தமிழ் இதழ்ப் பணி இணையற்றது. ஆய்வாளர்கள் உரிய வகையில் பயன் கொள்ள வேண்டும்.

கட்டுரை வெளியிடும் போது ஆய்வாளர் தம் பெயரோடு, அவருடைய அலைபேசி / தொலைபேசி எண்களையும் கொடுத்தால், அத்துறை ஆர்வலர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு, மேலும் வளர வாய்ப்பு ஏற்படும்.

எண்ணிப் பார்த்திட அன்புடன் வேண்டுகிறேன்.

**முனைவர் பூந்துறயான்**, கள்ளிப்பட்டி

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். (குறள் 952)

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/57 April 2013 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month




# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- ✦ இளம் இலக்கியம்
- ✦ இளங்கலை
- ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர்
- ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.